இதின் விலை 1 அணா.

கணபதி துணை

இராமாயண பாகவத சாரசங்கிரக

ஸ்ரீகிருஷ்ண ஸ்தோத்திரம்

பார்வையிடப்பார

கோயமுத்தூர் வித்தியாபாநு அச்சுயந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பட்டது.

Copy-right. **1924.** *Registered*

துரைஜில்லா பழனித்தாலூக்கா ஆயிக்குடி ஜமீன்
ஸ்தான விதவ சிரோன்மணியாகிய மகா-ள-ள-ஸ்ரீ
ப. பொன்னுசாமிக் கவிராயர் அவர்களால்
இயற்றப்பட்ட சாற்றுக்கவிகள்.

அறுசீர்க்கழி நெடிலடி.

திரமென் னுந்துழாயலங்கலணி மார்பன்சா
பம்வாள்தண்டு
திரவஞ் சுஞ்சுதரி சனமேந்து மாலிற்கு
நஞ்சுண்டேந்திரன்
திரசுப் பிரமணிய கவீசுரன் செய்
புகல்பாட்டொவ் வொன்றினுக்குச்
த்திரமுங் கையசைக்கு மரப்பாவை
சிரக்கம்பஞ் செய்யுந்தானே

பொருமாலை வாயக்கரும்பி னிரதஞ்செந்
தேன்சீனி புசித்தாலின்பந்
தருமாலை யார்சோலை சூழ்கோய நகர்மீது
தடமாலிஞ்சி
உருமாலை யங்குலவு திருமாலை வாழ்த்தியொரு
மாலைசொற்றான்
கருமாலை யகற்றுமினிச் சுப்ரமண்ய கவிசுரன்பாக்
கணைடென்றாரே

நாரதியம்பொறிக்குநவில் பாக ,தசரிதமது
நவின்றான்க்ரீடி
சாரதியாகிய வேணுகோபாலன் மீதுசதுர்
மறையோர் வாழ்த்தக்
காரதிகம் பொழிவதெனத் தமிழ்மாரிபொழிந்தகவ
சுரஞாகண்ய
மாரதிமா ரன்சுப்ர மணியகன திவ்யநா
வலவன்றானே.

மதுரைஜில்லா ஆற்றூர் கிராமம் கந்தாடை
இராமகிருஷ்ணையா குமாரர் இராதாகிருஷ்ணையர்
இயற்றியது

நேரிசையாசிரியப்பா.

ஏர்வளர் வெள்ளியங் கிரியின் றிழிதரு
நீர்வள ரருவி யெறியு முத்துச
சங்கொடு பலவள மேந்தி யிருகரையுஞ்
சிந்திச சென்று சில்லென வொலித்துக்
கொண்ட றாங்கு ண்டலை பலவே
யெண்டிசை விரியச் செய்து விளங்கும்
நொய்யலெனுங் காஞ்சி சூழுங் கொங்கின்
மெய்யிற் சிரமெனத் தானே பொலியுங்
கோயந் துலங்கக் கோயில் கொள்ளு
மாயவன் றன்மேற் றோத்திரப் பாமாலை
பாகவதப் பத்தாங் காந்தக் கருத்தைப்
பாகமோ டமைத்து முப்பான் மூன்று
வாடா மலரான் வகைபெறத் தொடுத்தனன்
ஆறிய மாங்கில மமைவுறக் கற்றுப்
பாரிற் செந்தமிழ் பழுதறப் பயின்று
சீர்த்தி மேவுந் திருவிளை யாடலைக்
கீர்த்தனை யாகவே நேர்த்தியாக் கிளத்திய
பீடார் நஞ்சுண்ட விப்பிரன் றன்றவக்
காளைக் கவீச்சுரச சுப்ரமண்யன்
வேளைப் பழித்து விளங்கெழி லோனே.

ஸ்ரீ கிருஷ்ண பரப்ரமனேநம:
சென்னை திருவல்லிக்கேணியில் கோயில்கொண்டிருக்கும்
ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள்பேரில்,

இராமயண சங்கரகமாலா.

ஸ்ரீகிருஷ்ண ஸ்தோத்திரம்

1895ம் ௵த்துக்குச்சரியான மன்மத-௵ இயற்றப்பட்டது

விநாயகர் தோத்திரம்.

நேரிசை வெண்பா.

சீராமன் காதை திருவல்லிக் கேணிநர
நாரா யணன்பேரில் நாநவிலச்—சோரா
மதுரகவி மாரி மகிழவருள் முன்னோன்
பதுமபதம் நன் னெஞ்சே பற்று.

தோத்திரம்.

எண்சீர் கழிநெடிலாசிரிய விருத்தம்.

பாற்கடலு மரவணையுந் துறந்த யோத்திப்
பானுகுலத் தயரதன்மா மதலை யாகி
நோற்கவரு வேள்வியிற்று டகையைச் செற்று
நுவல்சாபந் தகலிகைகல் லுருவ நூறி
மேற்கவிஞர் நிலைமாட மிதுலைக் கேகி
வின்முறித்துச் சனகிமினை விரும்ப வேட்டு
மாற்பெருகு திருவல்லிக் கேணி நின்ற
மாயனரன சாரதிதாள் வாழ்த்து நெஞ்சே. 1.

தடுத்துவரு மழுவலான் செருக்க ழித்துத்
தம்பியரோ டயோத்திவரத் தந்தை யீந்த
முடிப்பரதற் செய்தசிற் றவ்வை சூழ்ச்சி
முடித்தருளி யுடுத்தவற் கலையுங் கொண்டு
வடுத்தடங்கட் சீதையிலக் குவனுஞ் செல்ல
வழிக்குகனைத் துணைகொடயற் பரத்து வாசன்
அடுத்தவரை சென்றதிரு வல்லிக் கேணி
யர்ச்சுனசா ரதிபதத்தை யகங்கொ ணெஞ்சே 2.

வரைகாட்டிச் சனகியுட னிருப்பத் தந்தை
மாய்வறிந்த பரதனனன் மெழுகாய் வாடி
யுரைகாட்டித் தன்முனைமீண் டழைப்ப னென்றே
வுயர்சித்ர கூடமரு குறக்கண் டங்கே
கரைகாட்டு கங்கைகுடைந் தரசற் கீமக்
கடன்முடித்துப் பாதுகைதந் தனுப்பக் கானம்
விரைகாட்டு வழிகொடிரு வல்லிக் கேணி
விமலனரன் சாரதிதாள் வேண்டு நெஞ்சே.

தண்டகத்துப் புகுதவத்ரி யனுசூ யைக்காய்
தகவேற்று விராதன்விழச் சரபங் கன்னில்
கண்டுசுதிட் டன்றவமுங் கொண்டு கும்பக்
கடுந்தவனை வணங்கிசிலைக் கணைகொண் டேங்கும்
அண்டருய பஞ்சவடி யிருப்பக் காதல்
அலைதரசூர்ப் பனகைவா தாடக் காதுஞ்
செண்டுமுலை மூக்கிளையோ னரியச் சீர்சால்
திருவல்லிக் கேணியர்தாள் சேவி நெஞ்சே

மூக்கறுந்த சூர்ப்பனகை கரனுந் தூட
முச்சிரனும் படைக்கடலை முடித்தி லங்கா
விராக்கத ராவணற்கிரா மனுமி லக்கு
வன்சீதை யெழில்விரிப்ப விடைந்து காமத்

தீக்கொளுத்த மாரீச னைப்பொன் மானய்ச்
சீதைமுனம் விடுப்பவவ டிருக்கை பற்றற்
காக்கவெணித் தொடர்ந்ததிரு வல்லிக் கேணி
யர்ச்சுனன்றேர்ப் பாகனடிக் காட்கொ ணெஞ்சே

முன்சென்ற வரக்கன்றழாய் மோலி யம்பின்
முடிவுறும்போ தனுசனபெயர் மொழிந்தி றக்க
மன்பொன்ற வருவாக்கன் றன்னை யேங்க
மைத்துனன்சொன் மறுத்துவொலி வழியே போக்கி
பொன்சென்ற வருக்தனிமென் கொடியைத் தேர்மேல்
பொய்த்தவசி பிராவணன்விண் கொண்டு போகத்
தன்சென்ற விதியெனத்தேர் அல்லிக் கேணித்
தனஞ்சயன்சா ரதிபதத்திற் ருழ்வாய் னெஞ்சே

சடாயுவிதி செய்தயோ முகிதன் ஞசி
தடிந்துகவந் தனுக்கருளிச் சவரி யின்சொற்
படாவழிகிட் கிந்தையனு மான்சுக் ரீவன்
படைத்துணையின் வாலிவிழப் பதவிதந்து
கடாமுவரிக் கடருண்டி யனுமான் சீதைக்
கண்டேது விட்டிலங்கைக் காவ லானை
விடாதுபொரச் சென்றதிரு வல்லிக் கேணி
விஜயசா ரதிபதத்தை வேண்டு னெஞ்சே

வடணற்குச் சரணளித்துத் தசக்கி ரீவன்
விறலறிந்து கடலணைத்துக் குரங்கின் சேனை
யேர்டிலங்கை நகர்வளைத் தங்கதன் றூதோட்டி
யுருமுமிரா வணன்முதல ருயுத்தித் தாட்டித்
தேடுகும்ப கர்னனுடல் சிரம்வே ருக்கிச்
செருவிலதி காயனிரா வணனைத் தேய்த்துப்
பீடுபெறத் திருவல்லிக் கேணி நின்ற
பேடிசா ரதிமலர்த்தாள் பேணு நெஞ்சே.

திருமகள்சீ தையையங்கி கரித்துச் சேர்ந்த
தெசரதனு ரருள்வரத்தின் சிறந்து சேது
அரிவைதில கங்காணக் காட்டிப் புட்ப
வரியேறி யயோத்திவரப் பரத்து வாசன்
இருகையிருந் தருகுபர தன்பால் காற்றின்
இளஞ்சுதனை விடுத்தடுத்து எழில்கொண் டோங்குஞ்
சிரசின்முடி தரித்தபிரான் சீதா ராமன்
திருவல்லிக் கேணியர்தாள் சேவி நெஞ்சே

புவிமகட னுதலிலணி திலகம் போன்று
பொலிதருகே ரளமடுத்த கோங்கு நாட்டின்
நவமணிகள் கொழித்திடுமோ காஞ்சி நொய்யல்
நதிக்கரையின் கோயநகர் நாளும் வாழுங்

9

கவுண்டனிய ராசுவலா யனரால் ருக்கு
கழறுசத்ய மங்கலப்பேர்ச் சரண ராய்ந்தோர்
கவிஞர்குலச் சுப்ரமண்யன் பாடல் பத்துங்
கருதவலார் திருவிளங்கக் களித்து வாழ்வார்

ஸ்ரீராமஜெயம்.

கோயமுத்தூர் இராஜவீதியில் கோயில்கொண்டிருக்கும்
ஸ்ரீ வேணுகோபால கிருஷ்ணஸ்வாமியின்பேரில்

ஸ்ரீமத் பாகவத தசமஸ்கந்த சங்கிரகமாலா.

ஸ்ரீகிருஷ்ண தோத்திரம்

1924-ம் ௵க்குச்சரியான ருத்ரோத்காரி-௵ தை-௴
இயற்றப்பட்டது.

கடவுள் வாழ்த்து.

விநாயகர் தோத்திரம்.

எண்சீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

விரிபுவன முழுவதையும் படைத்துக் காத்து
வெறுவெளியாய்த் துடைத்தழித்து மீண்டுஞ் செய்யும்

ஒருமுதலவ னுமுயற்சி திருகா தேத்தும்
உயர்முதல்வ னெவனெனே வுயிர்கள் போற்றும்
கரிமுகத்தி ஞேர்கோட்டுப் புழைக்கை நால்வாய்க்
கணபதியங் குசபாசக் கரவே ரம்பன்
பெரியவ னப்பரம்பொருடாள் கருத்துட் கொண்டு
பின்னை கேள்வன்சரிதை பேசி வாழ்வாம்.

அவையடக்கம்.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

செல்லிநக ரருளாள தாச னென்னும்
நிறைமதுர கவிவரத ராஜ னேராய்
சொல்லியமா பாகவதப் புராணந் தன்னிற்
றமிழாய் மௌலிக் கிருஷ்ணன்செய் தூய வாடல்
புல்லியமென் மொழியாற்றோத் திரமாய்க் கோத்துப்
புலவர்முனம் வனனெதிர்ப் புட்டுள் ளற்போல்
அல்லியுந்தா மரைத்தடத்தி னெழுந்தாற் போலு
வாட்டுகின்றேன் புன்கவியா ராட்டு வீரே.

ஆக்கியோன் பெயருங்காலமும்.

செப்புசக மாயிரத்தெண் ணூற்று நாற்பான்

சேருமைந் துருத்திரோத் காரிக் கோயை
விப்பிரரில் சத்தியமங் கலப்பேர்ப் பாத
வேதவிருக் காசுவலா யனசூத் ரத்தின்
மெய்ப்புரையார் கவுண்டன்ய ரிஷிகோத் 'ரத்தின்
விளங்குகவி நஞ்சுண்டன் விரதத் தோன்றல்
சுப்பிரமா மணிக்கவிஞன் கிருஷ்ண னுடல்
சுருக்கியமுப் பதின்மூன்றாய்த் துதிசெய் தானே.

ஸ்ரீகிருஷ்ண தோத்திரம்.

எண்சீர்கழி நெடிலாசிரிய விருத்தம்.

வடமதுரை தேவகிபால் வசுதே வர்க்கு
மகவாகி யசோதைநந்தன் மகிழப் போந்து
இடமாருங் கோகுலத்தில் வளரக் கஞ்சன்
ஏவியபூ தனைமுலைப்பா லுயிரோ டுண்டு
படமாடு மணித்தொட்டிற் சகடா சூரன்
படிமுடிய வடர்ந்துதைத்த பாதத் தானைக்
குடமாடுங் கோயநகர் கோயில் கொண்ட
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம். 1.

கஞ்சன்விடு காலியா சுரன்விண் ணோங்குங்
காற்றாகி மாற்றார்வேர் களைய வந்த
மஞ்சனைவான் மிசையேற்றி மறைப்பத் தீயோன்
மனம்பதறக் களந்திருகி மண்ணின் வீழ்த்தும்
அஞ்சனமா மேனியனைக் கோழி யாய்வந்
தலக்கணித்த வரக்கன்முடி யறுத்த தாமக்
குஞ்சியனைக் கோயநகர் கோயில் கொண்ட
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 2.

ஆவினிளங் கன்றுகளை யவிழ்த்து விட்டும்
அடித்தணைய வருமாயர் நகைக்கச் செய்துங்
காவிவிழி யார்மனையிற் பாண்டத் தேறுங்
கட்டிததி யிழுதுவெண்ணெய் களவு செய்தும்
பூவுலா கலமேறி யுறிக்க ணீரம்
புடைத்து துளைத் தளைவாயிற் புகட்டி யுண்டும்
கோவியர்முன் சிறாருடனே குடந்தங் கூட்டும்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம். 3.

தாழிததி கடையுமனை தனப்பால் வேண்டத்
தாமதிக்கக் கடமுடைத்து வெண்ணெ யள்ளிக்
கீழலையு மிற்புலிக்கு மரிக்கு மீந்து
கேதமிழைத் தேபாறிக் கிட்டோந் தாய்கை

வீழாம லோடிதவ ததிபாண் டற்கு
வீட்டையளித் தசோதைகறை விசியத் தாலிக்
கோழியடை மரம்வீழ்த்திக் குமர ராக்குங்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம். 4.

பலம்விற்பா டனைநோக்கி விலைக்குக் கொள்ளப்
பழந்தருதி யெனக்கேட்டுப் பழங்களெல்லாம்
கலந்தவிரத தெருவுகுத்து நேய வாயர்
களுக்குதவக் களித்களித்துக் கவின்கொள் காலின்
சிலம்புகலினென்றார்ப்பக் கிண்கிணென்னத்
திருவரைப்பூ ணுடைகுழ லலையச் சுட்டி
குலுங்கவே நீதமுணக் குடந்த மாடுங்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 5.

துன்னிமித்தங் கோகுலத்தில் மிகவே யாண்டு
தொறுவர்மனை துறந்தியமு னைத்தோ யஞ்சேர்
மன்னிறுத்தும் பொழில்பிருந்தா வனஞ்சேர்ந் தூய்ய
வடியும்பால் வண்ணனுமெண் ணுயர் சூழப்
பன்னிரைத்தே னுவும்வற்சம் பாய்ந்து துள்ளப்
பைம்புன்மேய்த் திடுமெண்டர் பார்த்திபன் சேய்க்
கொன்னிறுத்துங் கோயநகர் கோயில் கொண்ட
கோபால கிருஷ்ணன்சீர் _றி வாழ்வாம் 6.

மண்டுவெஞ்சக் கஞ்சன்விடு பெகனுங் கன்றை
விளவுதிர வீசிவையம் வீழ மூர்க்கன்
மாண்டுதிரம் வாய்வழியப் பிளந்த டுத்த
மாசுணமா மகாசுரன்வாய் வழியே சென்று
கீண்டெறிந்த கேசவனை மூசு கூலங்
கேளிருடன் வற்சமயன் கிளர்விண் மாற்றக்
கூண்டடையுங் குயில்கூவுங் கோய னூர்வாழ்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 7.

தாலவனத் தனந்தனுங்கோ விந்த ரோடு
தனமேய்ப்பத் தகைந்தெழுதே னுகனைச் சாய்த்து
ஆலவன லுமிழுங்கா ளியன்பே ரோரா
யிரஞ்சிரத்தே யுடலழுந்தப் படங்க டோறும்
நீலமுகின் மேனியுட னடுங் கண்ணன்
நெடுவரைபோ லடர்ந்தபெலம் பனைநீ றாக்கிக்
கோலமிகக் கோயநகர் கோயில் கொண்ட
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம். 8.

பெருமழையி னதிகணிறை நீத்த மோடப்
பிறங்குதனு நீராட வெய்தும் பெண்கள்
அரைத்துகிலைக் களவாடிக் குருந்தி லேறி
யரிவையர்க ளைக்கினரா யங்கை கூப்பி

ஒருத்திபின ரொருத்திகர மேந்தக் கூறை
யுவந்தளித்துச் சிந்தையுந்தி யும்ப ரேற்றுங்
குருமணியாங் கோவிந்தன் கோய ஹூர்வாழ்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம். 9.

கோபதியுற் சவாந்தடுத்து நந்த னேடு
கோவர்த்த னக்கிரியர்ச் சனைந டாத்த
மாபயோ தரம்பொழியு மழைமேற் கொள்ளா
வகைவரையேந் திப்பசுவின் மந்தை காத்துத்
தூபய மாடுநந்தன் வருணன் பாங்கர்
துன்னகலன் மின்னவவண் தோன்றி மீட்கும்
கூபதியாங் கோவிந்தன் கோய ஹூர்வாழ்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம். 10.

வேயூது மிசைகேட்டு விலங்கும் புள்ளும்
விருக்கமுமெய் மறந்துநிற்க விரக மேற்றி
வாயூறு மமுதொழுக வாய மாதர்
மயலெழுப்பி யம்பிகா வனத்தி னந்தன்
தீயூதும் பணிவாய்விட் டுயவித் தேசு
தெரிசனற்கு வீடளித்துச் சங்க சூடன்
கூயோல மிடக்கோறிக் கோய ஹூர்வாழ்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம். 11.

எயிலாடு மிதுலேகும்ப கன்பால் பெற்ற
மேழுமெற்றி நப்பின்னை யிசைய வேட்டு
அயிலாடுங் கஞ்சன்விடு மரிட்டா சூரன்
அடற்கேசி வியோமனு மரக்கர் கோறி
வெயிலாடும் வில்வேள்விக் கனந்த னந்தன்
விளித்தவக்கு ரூரனுடன் விரைவிற் சென்று
குயிலாடுங் கோயநகர் கோயில் கொண்ட
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 12.

சம்படங்க டாஙகுதா ருகனைக் கொன்று
தார்புனையுஞ் சுதாமனுக்குத் தனிவாழ் வீந்து
மூன்பொடுங்குந் திரிவக்கி ரியைநி மிர்த்து
மொய்குழலாக் கிச்சிலேயை முறித்தெ திர்த்த
தும்பிகுவ லயாபீட மகாபத் தீரன்
துன்முட்டி கன்சாணூ ரன்காய் கஞ்சன்
கொம்பிடர்ந்தம் மல்லர்தமை நமனூர் சேர்க்குங்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 13.

உக்கிரசே னற்குமுடி கவித்துக் கற்கன்
உதவியசோ ருபநயன மணிந்து நந்தன்
இக்குரைய சோதையுங்கோ குலத்திற் கேக
வியற்றிச்சாந் தீபினிக்க ணிசைநூல் கற்று

தக்கிணைக்காய் மகவழைத்து விடுத்துத் தவனைத்
தனிசுந்த னசோதைதுயர் தணிக்கச் செய்து
கொக்கின்மேற் குயில்கூவுங் கோய னூர்வாழ்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 14.

குந்திமைந்த ரத்திநக ரிருக்குஞ் செய்தி
குறித்தவக்கு ரூரனறிந் துரைப்பக் கேட்டுத்
தந்தியரண் மதுரைவாழ்ந் திருப்பக் கஞ்சன்
சாவறிந்த சராசந்தன் தனிப்போர் பத்தேழ்
பிந்தியப சயப்பட்டோ டிடவ டித்து
பிறங்குகர வீரகிர காலன்கா லயவன்
தொந்தழற்பஞ் செனமகதன் சேனை கோறுங்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 15.

இரேவதியை முசலிமணந் தின்ப மெய்த
விலக்குமியா முருக்குமணிக் கிராக மேற்றிப்
புராதனநா ரதனூற்கைக் கிளைய றிந்து
பூங்கோதை யனுப்பக்குண் டினவூர் போந்து
நரேசசிசு பாலனுருக் குமன்சொற் கேட்டு
நகரிபடை யொடுசூழ நாச்சி யார்தேர்
விராவி னிவர்ந் திடவணைத்துக் கோய னூர்வாழ்
வேணுகோ பாலகன்சீர் விளம்பி வாழ்வாம் 16

உருக்குமன்மா கதன்தந்த வக்கி ரன்சா
லுவன்சேதிச் சிசுபாலன் பவுண்ட ரன்னென்
றிருக்குநரா திபர்விளைப்பச் சக்க ரங்கை
யேந்திப்படைப் பூந்துகளா யிரிய வோட்டி
செருக்குளுருக் குமனைதொட் டிரதத் தட்டிற்
சிமிழ்த்துசிகை யைந்துமொரு கூறஞ் செய்து
குருக்குயி லுருக்குமணித் துவரை சேர்க்குங்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 17.

விதிவழி யுருக்குமணித் திருவை வேட்டு
வெயில்சமந்தகஞ்சூட்டு மெண்கின் சேயாம்
மதிவதனச் சாம்புவதிச் சதரா சித்து
மகள்சத் தியபாமை காளிந் திப்பெண்
துதிமித்ர விந்தைநாக் கினசித் தென்னுந்
தோகைபத்ரை யிலக்கணையார்த் தொடிக்கை பற்றிக்
குதிகொள்ளுந் துகிர்வாயிற் குழல்வைத் தூதுங்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 18.

சோதிடமா புரிநரகா சுரன்பார் மன்னர்
தோற்கவடித் தொருபதினா றாயி ரம்பேர்
மோதுசிறைப் பட்டவரை விடுவித் தன்னார்
மொய்குழலீ ரெண்ணாயி ரம்பேர் வேட்டு

வேதமுனிக் கலகத்தாற் பாரி சாத
விண்டருவைச் சததிதிரு வீட்டி னட்டிக்
கோதகலக் கோயனகர் கோயில் கொண்ட
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ் ாம் 19·

தங்கைசுபத திரைநரனுந் தபசி பற்றச
சந்திசெய்து வசுதேவன் தனிவேள் விப்பின்
நஙகைதே வகியீன்ற வறவர் முனனோ
நணணவிணை த தின்பமுற நயநது காட்டிக்
கஙகைகூ லககணடா கருணை ேனடு
கனிட்டனுமோா வீடுபெறக காட்சி தந்து
கொஙகுதிரும் பொஙகாதவழ் கோய னூாவாழ்
கோபால கிருஷ்ணன்சீா கூறி வாழ்வாம் 20.

அரன்கயிலை யடைந்துவர மேற்றுப் பெற்ற
வரிவடிவா லெதிாததபவுண டரனுங காசி
நிருபனும்போர்க் களத்தவிய நேமி தூணடி
நின்றகல வியன்கடலி னெரியச செயது
கிருத்திமமுஞ் சுதககணனை யுகிாணை டெற்றிக
கேடிழைதத துவிந்தனை யுங கீறிக் கோறிக்
குருகலையுங குளனிறையுங கோய னூாவாழ்
கோபால கிருஷ்ணன்சீா கூறி வாழ்வாம் 21.

சித்தசனை யெரித்தவழ லாடி சொல்லின்
கிசுவாகி மதனெனுந் திருப்பேர் கொண்டு
தத்தைமொழி யுருப்பிணிமி னகடு தோன்றி
சம்பரனு லம்பரமீன் றனிமோ டோவி
சித்திரவாண் டேறச்சம் பரனைக் கொய்து
திகழிரதித் தேன்மணந்து வயிறு வாய்த்த
கொற்றவனி ருத்தினப்பௌத் திரனைப் பெற்ற
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 22·

சாலுவதே சத்தங்கி சமண்டி பீகன்
சாதகமும் விசக்கிரனு மிடும்ப னோடு
மூலமற வொழித்தசும்பு கிடந்த வோம்பி
முன்னிருக னுருப்பெறவே மோட்ச மீந்து
வேலின்விழி யுருக்குமியை யனிருத் தற்கு
வேட்பித்துச் சுயோதனன்பெண் ணிலக்க ணைமின்
கோலமிகுஞ் சாம்பனுக்கு மணஞ்செய் விக்குங்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 2

வாணன்மக ளுடாங்கனைதன் கனவிற் கண்ட
மதன்சுதன்மேன் மயலாகிக் கலவி வேடபச்
சேணிடைச்சித் திரலேக்கைத் துயிலு மாரன்
திருமகனைக் கொடுபோந்து சேரச் செய்யச்

சோணிதமா புரத்தரக்கர் வாண னுன்கு
தோளொடிய வாயிரங்கை துணித்த வாழிச்
கோணல்வளை கதைவாள்கோ தண்ட மேந்துங்
கோபால கிருஷ்ணன்சீர் றி வர்ழ்வாம் 24.

வீமனுமர்ச் சுனனுடனு மறையோ ரென்ன
வேள்வியடுத் தமர்வேண்ட வெகுண்டு டன்ற
மாமக தனைக்காற்றின் மைந்தன் கொல்ல
மன்னர்சிறை விடுவித்து மகுடஞ் சூட்டி
பூமனுஞ்சே திபச்சிசுபா லனைச்சே தித்துப்
பொருவிலிணைப் பதநிழலிற் பொருந்தச் செய்யுங்
கோமனனைக் கோயநகர் கோயில் கொண்ட
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 25.

மாயைமிக மதனனுடன் நெடும்போர் செய்த
மறவன்சா லுவனைமுரண் மலைக்கும் போழ்தின்
நேயமுட னழுதரற்றும் பாஞ்சா லிக்கு
நீவிய மக்ஷயம்நீட்டி நிகர்த்த வொன்றன்
தாயதந்தி வக்கிரன்வி தூர தன்தன்
தலைதுணியச் சக்கரம்விட் டொழித்த செல்வக்
கோயநக ரிலகமணிக் கோயில் கொண்ட
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 26.

அரங்காடுஞ் சூதினுள நாடுஞ் செல்வ
　　மூனைத்துந்தோற் றடவிசென்ற வைவர் பன்னி
மருங்காடு துரோபதையை வனத்திற் றேற்றி
　　மாஙகனிக்காய் மனமறிந்து மறைதூர் வாசன்
பெருங்காட்டின் வியந்துநயந் தாசி கூறப்
　　பேருண்டி யூட்டுவித்துப் பிழை மாற்றிக்
குரங்காடு சோலைசெறிக் கோய லூராவாழ்
　　கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 27.

காளமுனி கடவியபூ தத்தி னாலுங்
　　கடுக்குளத்தி னீர்பருகுங் கடுமை யாலும்
வேளையைய பாண்டுமைந்தர் விளிந்தி டாமல்
　　விரைந்தோம்பி விராடநகர் வெளிவந் தோங்கப்
பாளைகயல் குதித்தாடும் பணைசூ ழத்திப்
　　பத்ருதூது பாண்டவர்க்காய்ப் பரிந்து சென்று
கோளறமெயத் துணையானோன் கோய லூர்வாழ்
　　கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 28

தூதேகி விதுரன்மனை விருந்தேற் றுற்ற
　　சுயோதனனை காடிரந்து மறுப்ப வன்னோன்
சூதான வாதனத்தை மிதிப்பக் காக்குஞ்
　　சூரரும்வீ ழருமாளச் சுழன்று தேய்த்து

வேதாதி விப்பிரன்சேய் விலகச் செய்து
வெயின்முளை குண்டலம்வாங்கி விதித்த தாய்க்குக்
கோதார்றப் பிறப்புரைத்தைங் குமரர். சேருங்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 29.

களப்பலிநாட் பின்னாக்கிக் காண்டி பர்க்குக்
கலக்கமறக் கீதைசொலிக் காங்கே யன்முன்
வளையெடுத்து பகதத்தன் பகழி தாங்கி
வலாரிசூ னுவையபிமன் மாளக் காத்து
தன்பரம னாய்க்காட்டிக் கன்ன னாகச்
சாயகம்பார்த் தனைவதையாத் தட்டைத் தாழ்த்திக்
குளம்பொலிய வளமலியுங் கோய னூர்வாழ்
கோபால கிருஷ்ணன்சீர் கூறிவாழ்வாம் 30

சூரன்சே யாவிவிடு முன்னே வண்மைச்
சுக்ரதத்தை யிரந்தேற்றுச் சுயோர்த னனைதன்
ஊரியா மனனிலையை வீமற் கோதி
உத்திரைநற் கருப்பரிக்ஷித் துயிரைக் காத்துப்
பாரந்தீர்த் துத்தருமற் கரசு சூட்டிப்
பதிமிதிலை வெகுலாசு வன்றே வற்கும்
கோரமிலாப் பதவிதந்து கோய னூர்வாழ்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 31.

மிடியேறு மனையேவக் குசல வர்க்கு
விபவமுற வாழ்வளித்து வேள்வி யாற்ற
முடியேற மகவிழந்த வைதீ கன்சேய்
முராரிபதங் கிரீடியுடன் முடுகி யீந்து
குட யோறும் யதுகுலத்தை முனிவா சாபங்
கொயவிடுத் துத்தவாக்குத் தத்வங் கூறிக்
கொடியேறு மதின்மீறுங் கோய னூர்வாழ்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 32.

த்தவனைப் பதரிகா சிரமஞ் சேர்ப்பித்
துயர்முசலி யுடனெதுக்க ளும்ப ரேறத்
த்தையெனக் கிராதனெய்த சரந்தங் குடடங்
கைப்பந்தா ருகர்க்கருளி வைகுண் டஞ்சேர்
மத்தர்முக லானபரம் பொருளாங் கண்ணன்
முராரியரி யச்சுதன்மா தவன்கோ விந்தன்
காத்தலர்தேர் முருகுயிர்க்குங் கோய னூர்வாழ்
கோபால கிருஷ்ணன்சீர் கூறி வாழ்வாம் 33.

வாழி—சந்தவிருத்தம்.

ண மாய்க்கமட மொறுழி கேசரி
விறறகுறட் பாசு ராமனாய்
வெய்ய வன்குல விராமனாய்ப் பொதுவர்
மெசசு கிருஷ்ணபல் ராமனாய்
ஆன கற்கியென வவதரித் துலகர்
அல்ல றீர்க்கவரு மாழியான்
அரிய காதைசொலு வார்கள் கீறிபிற
ரறிய வோதியுரை யறைகுவார்
மாணி லம்புகழு மன்ன ராகிதிரு
மக்க ளொக்கன்மிக வாழிய
வாழ்க வென்றுமறை வாழ்க வென்றுமழை
மாத மும்முறை வழங்கவாண்
பாணி ரைப்பெருக சுப்ரமண்ய கவி
பாடல் பாடுமவர் வாழ்கநீள்
பணைபர் வாழ்கதுதி பாடல் வாழியரி
பதும பாதநிழல் வாழியே.

முற்றிற்று.

Printed at the Literary Sun Press, Coimbatore.